Registered as a Newspaper




# உதயன்

விலை ரூபா 3-50




சுடர் 5: பிரமோதூத ஸூ ஆடி மீ 03 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ் பிறை 25 (19 - 07 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 147

# அம்பாறையில் படையினரின் முக்கிய மினி முகாம் வீழ்ந்தது!

## புலிகளின் மட்டு.-அம்பாறை மாவட்ட ராணுவ பொறுப்பாளர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற நேரடி மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் அம்பாறை — மட்டக்களப்பு மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் லெப்டினன்ட் கேர்ணல் றேகன் வீரமரணமடைந்தார்.

அதனையடுத்து நடத்தப்பட்ட பெரும் தாக்குதலில் அம்பாறை மாவட்டம் பாளையடிவட்டையில் 35ஆம் கிராமத்தில் இருந்த ஸ்ரீலங்கா இராணுவப் படையினரின் முக்கிய முகாம் ஒன்று விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்தது.

கடந்த திங்களன்று அம்பாறை மாவட்டம் 35 ஆம் கிராம மினி முகாமிலிருந்து வெளியே வந்த ஸ்ரீலங்கா படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பாளையடிவெட்டையில் நேரடி மோதல் இடம் பெற்றது.

இந்த மோதலில் லெப்டினன்ட் கேர்ணல் றேகன் வீரமரணமடைந்தார்.

சுமார் 45நிமிடங்கள் நீடித்த இந்த மோதல் சம்பவத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் உயரதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். இரு இராணுவத்தினர் படுகாயமுற்றனர்.

அதைத் தொடர்ந்துநேற்று அதிகாலை 2 20 மணியளவில் 35 ஆம் கிராம மினி முகாம் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலைத் தொடுத்தனர்.

இந்தத் தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் —

எஞ்சியோர் முகாமை விட்டுத் தப்பி ஓடியதாகவும் — விடுதலைப் புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

முகாமிலிருந்து விடுதலைப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பல தாக்குதல்களை நடத்திய லெப்டினன் கேணல் றேகன்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளின் மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் றேகன் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பல தாக்குதல் சம்பவங்களை முன்னின்று நடத்தியவர் என்று விடுதலைப் புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் குறித்து அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தாவது:-

ஆரம்பத்தில் களுவாஞ்சிக்குடிப்பகுதி பொறுப்பாளராகவும், பின்னர் மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளராகவும் பணியாற்றிய றேகன் இந்தியப்படையுடனான யுத்தத்தின் போது மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட இராணுவப் பொறுப்பாளராகப் பொறுப்பேற்றார்.

1985, 86 ஆம் ஆண்டுகளில் கொக்கட்டிச் சோலையை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த போது களுவாஞ்சிக் குடி, வெல்லாவெளி முகாம்களிலிருந்து சிங்கள இராணுவம் உள்ளே நுழைய முடியாதபடி காத்து நின்றார்.

மாங்கேணி இராணுவ முகாம் தாக்குதலிலும் கொக்கட்டிச்சோலை - தம்பட்டை

(3 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

19- 7- 90

வியாழக்கிழமை ஆடி 03

சுபநேரம்:

7-31— 9-10

இராகுகாலம்

01-31—3-01

## இந்திய மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படை தாக்கு

சென்னை, ஜூலை 19

பாக்கு நீரிணையில் இந்திய மீனவரை லங்கைக் கடற்படையினர் துன்புறுத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்திய மீன்பிடிப் படகு ஒன்றின் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பின்னர் அப்படகில் இருந்த மீனை கடற்படையினர் எடுத்துச் சென்றனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராமேஸ்வரம், கச்சதீவில் இரண்டு மீனவர்கள் காயம்

சென்னை, ஜூலை 19

இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு இந்திய மீனவர்கள் காயமடைந்தனர் என்று இந்திய அரசு தெரிவித்தது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம் பெற்றது.

கச்சதீவு அருகே இந்திய மீனவர்களை நோக்கி இலங்கைக் கடற்படை அதிகாரிகள் சிலர் சுட்டதில் ஒரு மீனவர் காயமடைந்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் இடம்பெற்ற அத்துமீறல் சம்பவங்கள்

திருகோணமலை மாவட்டத்தில், கடந்த ஒரு வார காலத்தில், படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் அத்துமீறல் சம்பவங்கள் குறித்து விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் நேற்று தகவல் வெளியிட்டன. விவரம் வருமாறு:-

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் மோதலை அடுத்து நேற்று விமானக் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூலை 19

மாங்குளத்தில் செவ்வாய்க்கிழமை விடுதலைப்புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களை அடுத்து நேற்று மாங்குளம் முகாமைச் சூழவுள்ள பகுதிகளை நோக்கி கடும் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

செவ்வாய்க்கிழமை மாங்குளம் முகாமிலிருந்து வெளியேறிய படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் காலை9மணிமுதல்மாலை 6 மணிவரை பெரும் சண்டை இடம்பெற்றது.

இந்தச் சண்டையில் 15இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும்தமதுதரப்பில் நான்கு போராளிகள் வீரமரணம் அடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

நந்தன், குணம், மிதுனம், சபில் ஆகியோரே வீரமரணம் அடைந்தனர் என்றும்.

விடுதலைப்புலிகளினால் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

- ★ ரி56-1 - ஒன்று.
- ★ ரி 81 - 5 - இரண்டு.
- ★ ஏ. கே. மகஸின் - பதினாறு
- ★ ஆர். பி. ஜி ஒன்று.
- ★ ஷெல் - இரண்டு.
- ★ 82 ஸ்ராண்ட் மோட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்குத் தனிப்படை தேவை ஸ்ரீலங்கா அரசு சம்மதிக்குமா?

### இப்படிக் கேட்கிறார் யோகி

யாழ்ப்பாணம், ஜூலை 19

ஒரே இலங்கையில் இரு இனங்களும் பாதுகாப்பாக வாழ்வதாக இருந்தால் எமது இனத்துக்கு தனிப் படை தேவை. அப்படி தனிப்படை எமக்குத் தருவதற்கு ஸ்ரீலங்கா அரசு சம்மதிக்க மாட்டாது. அது சாத்தியமற்றது. இத்தனை அழிவுகளுக்கும் பின்பும் அடிமைகளாக வாழ தமிழ் மக்கள் தயாரா?

இப்படிக் கேட்டார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி.

அண்மையில் வல்வெட்டித்துறையில் வீரமரணமடைந்த கரும்புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத், ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் நேற்றுக்காலை நல்லை திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்க ஆதரவில் அதன் தலைவர் திரு. ஆ. மு. இராஜகோபால் தலைமையில் கூட்டம் நடைபெற்றது

கூட்டத்தில் திரு. யோகி மேலும் கூறியதாவது:-

எமது மண்ணின் விடுதலைக்காக உயிர்துறக்க ஆயிரக் கணக்கான போராளிகள் மனத்துணிவுடன் முன் நிற்கிறார்கள். அவர்கள் எப்படியாவது நமது மண்ணைக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



விழுந்தாலும் மீசையிலை மண் படவில்லை என்ற நிலையை உண்டாக்குவதற்காக உப்பிடி ஒரு அழைப்போ? யோசனையோ?

## கிழக்குப் பல்கலைக்கழக மாணவருக்கு ஆபத்தில்லை

### அங்கிருந்து வந்த மாணவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

கிழக்கிலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் ஆபத்து ஏதுமின்றி பல்கலைக்கழக விடுதியிலேயே தங்கியிருக்கிறார்கள்.

அவர்களில் ஒரு பகுதியினர் புறப்பட்டு வந்த பஸ் படையினரால் வழிமறிக்கப்பட்டு அந்த மாணவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என அஞ்சப்பட்டதாக வெளியான செய்திகள் சரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களை ஒப்படைத்தால் தான் யுத்தநிறுத்தம் என்கிறார் ரஞ்சன்

கொழும்பு, ஜூலை 19

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தால் (Surrender of arms )மட்டுமே யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை நடைபெறும்.

ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு பேச்சுவார்த்தைக்கு வருவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

— இப்படி பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான நிபந்தனையை அரசாங்கம் மாற்றிக் கொண்டு விட்டதா? என்று சுதந்திரக் கட்சி எம்பி நிமலசிறிபால டி சில்வா கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

[உ-எ]

## ஆசிரியர் சம்பளத்துக்கு பணத்தொகை ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாண மாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்களின் ஜூன் மாதச் சம்பளம், மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த ஆசிரியர்களின் சம்பள முற்பணம் ஆகியவற்றை வழங்குவதற்கான பணத்தொகைக்கு கல்வி அமைச்சு ஏற்பாடு செய்திருக்கிறது.

இத்தகவலை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சம்பளத்துக்கும், முற்பணத்துக்கும் உரிய தொகையை யாழ் அரச அதிபர் ஊடாக யாழ் கல்விப்பணிப்பாளருக்கு கல்வி அமைச்சு அனுப்பிவைத்துள்ளது —

அதனைத் தொடர்ந்து இன்று வியாழக்கிழமை சங்கத்தின் நிர்வாகிகள், கல்விப் பணிப்பாளரையும் கணக்காள

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் வீதித் தடை

ஆனையிறவு முகாம் முன்பாக வாகனங்கள் செல்ல முடியாதவாறு இராணுவத்தினர் நேற்று தடைகளைப் போட்டனர்,

நேற்று முன்தினம் அங்கு இடம் பெற்ற அசம்பாவிதங்களையடுத்து முகாம் முன்பாக வீதிக்கு குறுக்கே கற்களால் தடைபோடப்பட்டது.

[ஒ-3]

## அடுத்த வாரம் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம். ஜூலை 19

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியத்துக்கான பணம் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டின் முயற்சியால் வந்து சேர்ந்துள்ளது.

வவுச்சர்கள் கிடைக்காததால் கடந்த மாத வவுச்சர்களின் அடிப்படையில் இதனை வழங்குவது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

அதே நேரம் இன்று செஞ்சிலுவைச்சங்க வாகன அணியுடன் வவுச்சர்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும்பாலும் அடுத்தவார மளவில் ஓய்வூதியம் வழங்கப் படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. (இ-3)

## இந்திய எம்.பிக்கள் குழுவை வடக்கு-கிழக்கு வர அழைப்பு!

### அனைத்துக் கட்சிக் குழு விடுத்தது!!

புதுடில்லி, ஜூலை 19

வடக்கு, கிழக்கு மாகாணத்தில், தமிழர் வாழும் பகுதிகளுக்கு, இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று நேரில் சென்று நிலைமைகளை ஆராய வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து வந்த அனைத்துக் கட்சி எம். பிக்கள் குழுவே இதனை ஒரு யோசனையாகத் தெரிவித்தது.

அனைத்துக் கட்சிக் குழுவினர் நேற்று புதுடில்லியில் பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களைச் சந்தித்து இலங்கை நிலைமை பற்றி விளக்கினர்.

அப்போதே, இந்திய எம். பிக்கள் கொண்ட குழு ஒன்று வடக்கு, கிழக்குப் பகுதியில் தமிழர்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று நிலைமையை ஆராய வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்தனர்.

அந்த யோசனையை பாரதிய ஜனதாக் கட்சித்தலைவர் அடல்பிஹாரிவாஜ்பாய் ஆதரித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை —

பிரிவினைவாதத் தடுப்பு என்ற பெயரில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படக் கூடாது என்றும் பாரதிய ஜனதா கட்சித் தலைவர்கள் இலங்கைக் குழுவிடம் எடுத்துரைத்தனர். [அ-எ-9]

## தமிழர் படுகொலையைக் கண்டித்து புதுவையிலும் நாளை ஹர்த்தால்

இலங்கைத் தமிழர் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து பாண்டிச்சேரி மாநிலத்திலும் பூரண ஹர்த்தால் நடத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. டி. இராமச்சந்திரன் நேற்று அறிவித்தார்.

நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் இந்த ஹர்த்தாலை ஒட்டி, அன்று பொதுவிடுமுறை நாளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஹர்த்தால் முழு வெற்றியடைய அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு ஜனதாதள் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ்நாடு காங்கிரஸ் (எஸ்) கட்சியும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று அறிக்கை விட்டது. (அ-எ)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### இரசாயன நூல்கள்

திரு. மகாதேவா அவர்களின் அசேதன இரசாயனம், பௌதிக இரசாயனம், புவிவளம் உட்பட எல்லா நூல்களும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தனலக்சுமி புத்தக சாலை, சுன்னாகம். (13763)

### தவறிவிட்டது

துரைராசா நற்குணராசா சங்கானை கிழக்கு பண்டத்தரிப்பு முகவரியுடைய எனது அடையாள அட்டை நாவற்குழியடியில் 16-07-90அன்று தவறிவிட்டது. எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். (13762)


# முத்துஐயன்கட்டுத் திட்டத்தில் 1,500 ஏக்கர் பயிர் அழிகிறது

## நீர்ப்பாசனத்துக்கு எரிபொருள் இல்லை

ஒட்டுசுட்டான், ஜூலை 19
முத்து ஐயன்கட்டுத் திட்டத்தில் ஏற்று நீர்ப்பாசன உப உணவு செய்கையின் கீழ் உள்ள 1500 ஏக்கர் பயிர் தண்ணீர் இன்றி அழிகிறது:

இத்திட்டத்தின் கீழ் சிறுபோக உப உணவாக நிலக்கடலை, வெங்காயம், மிளகாய் முதலியன 1200 ஏக்கரில் ஏற்று நீர்ப்பாசன முறையில் பயிரிடப்பட்டுள்ளன. டீசல் நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் நீர்ப்பாசனம் மேற் கொள்ளப்பட்டு வந்தது.

அதே போன்று பேர்ஆற்றுக் கரையில் 300 ஏக்கர் பயிர்ச் செய்கை நிலம், உள்ளது. மண் எண்ணெய்யால் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் நீர்ப்பாசனம் மேற் கொள்ளப்பட்டு வந்தது.

தற்போது எரிபொருள் இல்லாததால் நீர்ப்பாசனம் பாதிக்கப்பட்டு பயிர்கள் எரிந்து போகும் நிலையில் இருந்து வருகின்றன.

இதே வேளை சிறு போக நெல்லுக்குத் தேவையான உரத்துக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் இம்முறை நெற் பயிர் செய்கையும் பாதிக்கப்படும் ஆபத்து இருந்து வருகிறது. (இ-113)

## வட்டுக்கோட்டை அகதிகளுக்கு "போரூட்" நிறுவனம் உதவி

சுழிபுரம், ஜூலை 19
வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமைந்துள்ள ஐந்து அகதி முகாம்களுக்கும் வேண்டிய உதவிகளை போரூட் அமைப்பு செய்து வருகிறது. அத்துடன் அகதிகள் பராமரிப்பு சம்பந்தமாக கொழும்பு தலைமையகத்துக்கு அறிக்கை அனுப்பிவருகிறது.

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி, பிளவத்தை அ. மி பாடசாலை, சங்கானை மத்திய வித்தியாலயம், சங்கானை பழைய பொலீஸ் நிலையம், சங்கானை திறந்த வெளியரங்கு ஆகியவற்றில் அகதிகள் தங்கியுள்ளனர்.

காரைநகர், தெல்லிப்பழை, காங்கேசன் துறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து அகதிகளாக வந்தவர்களே இந்த முகாம்களில் தங்கியுள்ளனர்.

போரூட் அமைப்பு நிர்வாகி திரு. என். பாலசுப்பிரமணியம் முகாம்பற்றி தெரிவிக்கையில், எமது அமைப்பு வேண்டிய சகல உதவிகளையும் அகதிகளுக்கு வழங்கிவருகிறது. குழந்தைகளுக்கு பால்மா வழங்கியுள்ளது சுகாதார வசதிகள் உட்பட சகல வசதிகளையும் மற்றைய அமைப்புக்களுடன் இணைந்து செய்துவருகின்றது. எமது தலைமையகம் வேண்டிய சகல உதவிகளையும் வழங்குமாறு எமக்கு அறிவித்துள்ளது' என்றார் (இ-28)

## இந்தியாவின் "3 கவலைகள்"

கொழும்பு, ஜூலை 19
கடந்த ஜூன் மாதம் 11 ஆம் திகதி வடக்கு-கிழக்கு சண்டை ஆரம்பமானது.

அதன் பின்னர் வடக்கு-கிழக்கு சம்பவங்கள் குறித்து இந்திய அரசு மூன்று தடவைகள் கவலை தெரிவித்து விட்டது. [ஒ-எ]

## 2 ஹெலிகள் சேதமாம்

கொழும்பு. ஜூலை 19
விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலினால் யாழ். கோட்டை இராணுவ முகாமுக்கு உணவுப்பொருள் களைப்போடச் சென்ற இரண்டு ஹெலிக்கொப்டர்கள் சிறிது சேதமடைந்தன.

இப்படி கொழும்பு இராணுவத் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

## பங்கீட்டு அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 19
யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிப்பவர்களில் ஜனசக்தி, உணவு முத்திரை வைத்திருப்பவர்களுக்கு உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்படமாட்டா என்று யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

ஜனசக்தி உணவு முத்திரை வைத்திருப்பவர்கள் அவற்றைத் தமது பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளில் கொடுத்து உணவுப் பொருள்களையோ அல்லது வேறு பொருள்களையோ பெற்றுக் கொள்ளலாம் எனவும்—

ஜனசக்தி, உணவு முத்திரை இல்லாதவர்களுக்கு மட்டுமே பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டு அவற்றின் மூலம் உணவுப் பொருள்கள் பங்கிட்டுக் கொடுக்கப்படும் எனவும் —அவர் தெரிவித்தார். [அ-10]

## மங்கள தீப பூசை

யாழ்ப்பாணம், ஜூலை 19
சாவகச்சேரி அருள் மிகு துர்க்கை அம்பாள் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணி அளவில் அஷ்டோத்தர சத சங்க பிஷேகமும், பிற்பகல் 3.00 மணிக்கு தீபலக்ஷ்மி பூசையும் நடைபெறும். (இ)

## இந்தியா செல்ல காத்திருந்த அகதிகள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 19
இந்தியா செல்வதற்காக பேசாலையில் நின்ற மக்கள் மீது கடற்படைக் கப்பல் தாக்குதல் நடத்தியதை அடுத்து அங்கிருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயருகிறார்கள்.

கடந்த 15 ஆம் திகதி இத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது.

மக்கள் விடத்தல்தீவு, வங்காலை, எருக்கலம்பிட்டி, ஆகிய பகுதிகளை நோக்கியே இடம்பெயர்ந்துள்ளனர். (இ-3)

## யாழ். அகதிகள் எண்ணிக்கை 3 லட்சத்தைத் தாண்டியது

யாழ்ப்பாணம், ஜூலை 19
யாழ். மாவட்டத்தில் அகதிகளின் எண்ணிக்கை மூன்று லட்சத்தையும் தாண்டி விட்டதாக செயலககணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

மாவட்டத்துக்குள் அகதியானவர்களின் எண்ணிக்கை இரண்டு லட்சத்து 73 ஆயிரம் என்றும், வெளி மாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்துக்கு அகதியாக வந்தவர்களின் எண்ணிக்கை 39 ஆயிரம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் 352 அகதிமுகாம்கள் இயங்குகின்றன. (இ-3)

## மன்னார் தபால் சேவையை சீராக்குவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 19
மன்னார் மாவட்டத்தில் தபால் சேவையைச் சீராக்கும் நோக்குடன் மன்னார் மாவட்டத் தபால் அத்தியட்சகர் திரு. எஸ். சடாட்சரநாதன் தலைமையில் அதிகாரிகள்குழு ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் செல்லவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வடபிரதேச தபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர் மேற்கொண்டுள்ளார். [இ-10]


## விஷேட அறிவித்தல்

கீழ்க்காணும் பொருளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக இதைப் பாவிக்கலாம்.

அஸ்றா மாஜறின்
225 கிறாம் ரூபா 12. 50
கழிவு 5. 00
7. 50

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
எஸ். வி. முருகேசு,
383/15, நாவலர் ஒழுங்கை,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(13765)


## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**திருநாவுக்கரசு அசோகன்**
(மன்னார் புனித சவேரியார் கல்லூரி மாணவன்)

அன்னை மடியில்: 13 - 05 - 1969　　ஆண்டவன் அடியில்: 19 - 07 - 1984

வையத்தின் முழு நிலவாக நீ
வளர்தல் கண்டோமே திடீரென
வானத்தின் பிறைவடிவானாயோ!
இல்லத்தின் சுடரொளியாக உன்
இருப்பைக் கொண்டோமே அசோகா!
இருளிங்கே ஆறாண்டாய் மகனே!

ஓம் சாந்தி!

உன் பிரிவால் துயருறும்;
குடும்பத்தினர்.

அயன் ஸ்ரோர்ஸ்,
மன்னார்.
(13757)

"அசோகா"
தாவடி வடக்கு,
கொக்குவில்.

# ஜேர்மன் இணைப்புக்கான இறுதி முட்டுக்கட்டையும் நீக்கப்பட்டுவிட்டது

## கோர்பச்சேவ் - ஹெல்மட் கோல் பேச்சு வெற்றி

மாஸ்கோ, ஜலை 19
இரண்டு ஜேர்மனிகளும் அரசியல் ரீதியில் இணைவதற்குத் தடையாக இருந்த இறுதி முட்டுக்கட்டையை சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் நீக்கி விட்டார்.

மேற்கு ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோலுடன் நடத்தப்பட்ட இரண்டு நாள் பேச்சுக்களின் முடிவில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ், நேட்டோ அணியில் உத்தேச ஐக்கிய ஜேர்மனி இணைவதைத் தான் தொடர்ந்து எதிர்க்க விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

"நேட்டோ அணியில் சேருவதா, வேண்டாமா என்பதை தீர்மாணிக்கும் உரிமை உத்தேச ஐக்கிய ஜேர்மனி மக்களிடம் தான் உண்டு. அதில் தலையிட நான் விரும்பவில்லை—" என்று திரு கோர்பச்சேவ் சொன்னார்.

கிழக்கு ஜேர்மனியில் நிலை கொண்டுள்ள சோவியத் துருப்புக்களை விலக்கிக் கொள்வதற்கான நான்கு ஆண்டு காலத்திட்டம் ஒன்று குறித்து இருதலைவர்களும் இணக்கம் கண்டனர்.

ஐக்கிய ஜேர்மனியின் எதிர்கால இராணுவ அந்தஸ்து குறித்து சோவியத்யூனியன் கவலை கொண்டிருந்ததும் நேட்டோ அணியில் சேருவதை அதன் காரணமாக சோவியத் ஜனாதிபதி எதிர்த்து வந்ததும் குறிப்பிடத் தக்கது. (இ-எ)

## சென்னையும் பம்பாயும் எய்ட்ஸில் முன்னணி

புதுடில்லி. ஜூலை 19
இந்தியாவில் எய்ட்ஸ்நோயினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நகரங்களாகபம்பாயும், சென்னையும் கணிக்கப்பட்டுள்ளன.

இந்திய வைத்திய ஆராய்ச்சி நிலையம் உலக சுகாதார ஸ்தாபனத்திற்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கை ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 60 ஆயிரம் பேர் இந்தியாவில் எய்ட்ஸ்சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட வேண்டி ஏற்படும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. [ஒ-எ]

## வி. பி. சிங் சோவியத் யூனியனுக்கு

மாஸ்கோ, ஜூலை 19
இந்தியப் பிரதமர் வி. பி. சிங் இம்மாதம் 23 ஆம் திகதி சோவியத் யூனியனுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கிறார். (இ-எ)

## ஹரியானா முதல்வராக ஹுக்கும் சிங்

புதுடில்லி. ஜூலை 19
ஹரியானா முதலமைச்சராக திரு ஹுக்கும்சிங் ஏகமனதாக நேற்றுத் தெரிவு செய்யப்பட்டார்.

பதவி விலகிய திரு. ஓம் பிரகாஷ் சௌதாலா அவரின் பெயரை முன்மொழிந்தார்.

ஹரியானா ஜனதா தள்சட்டசபைக்குழுக்கூட்டம் புதுடில்லியில் நடந்தபோது இத்தெரிவு இடம்பெற்றது. (அ-எ)

## முதலாவது நினைவஞ்சலி



**பெருமான் உதயம் (நித்தி)**

மண்ணில்: 1956 - 06 - 09　　விண்ணில்: 1989 - 07 - 29

பாசத்தின் பிறப்பிடமே
பண்பின் உறைவிடமே
பால் மணம் மாறாத - உன்
திருமுகத்தைக் காணாது
பரிதவித்து நிற்கின்றோம்
சடுதியாய் உன் உயிர் பிரிந்ததுவே
இவ் வையகத்தில் தாம் மட்டும்
வாழ்வரென்று எண்ணினரோ
யார் வரினும் அன்புடன்
அன்னம் தான் இட்டீரே
அன்ன மிட்ட கை சாயுமுன்னே
உன்னைப் பறித்தனரே அநியாயமாய்
வாழத் தெரியாது தவிக்கின்றோம்
எம்மை எல்லாம் தவிக்க விட்டு
எங்கு தான் சென்றீரோ
எம் இதயத்தின் அணையா ஒளிவிளக்கே!

உமது ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்

தாய், தந்தை,
சகோதரர்கள்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு. [13756]


## இடம் மாற்றம்

புஸ்பா ரேட்ஸ்
(எசன்ஸ் ஹவுஸ்)
11/4 A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
என்னும் முகவரியில் இயங்கிய எமது ஸ்தாபனம்
பாதுகாப்புக் கருதி கீழ்வரும் முகவரியில் இயங்குகிறது

★ புஸ்பா ரேட்ஸ் ★
(எசன்ஸ் ஹவுஸ்)
66/6, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(முடமாவடி) [13743]


## 2ம் ஆண்டு நினைவு அஞ்சலி

**திருமதி கிறேஸ் நேசம்மா செல்லத்துரை**

பிறப்பு: 21 - 03 - 1915　　இறப்பு: 19 - 07 - 1988

" கர்த்தருக்குள் மரிப்பவர்கள்
பாக்கியவான்கள் "

— குடும்பத்தினர்

தேவிவிலா,
பண்டத்தரிப்பு.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி தங்கம்மா சின்னத்தம்பி**

மலர்வு:- 29 - 02 - 1909　　நினைவு:- 19 - 06 - 1990

அன்பின் தெய்வமே, எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டதேன் அம்மா படுக்கையில் வைத்து பார்க்கக் கூடாதென்றோ. நொடிப்பொழுதில் உன் உயிர் கவர்ந்தான் கொடிய காலன்.

அம்மம்மா உன் பெயர் தங்கம். தங்கம் போல் எம்மை வளர்த்தாய் எம் உள்ளத்திலும் வீட்டிலும் என்றென்றும் தங்கமாய். மின்னுவாய்

உன் ஆத்ம சாந்திக்கு என்றும் இறைவனை வேண்டும்;
உன் அன்புச் செல்வங்கள்.

"தங்கம்"
கன் பொல்லை வீதி,
நெல்லியடி,
கரவெட்டி. (13768)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மூடி மறைக்க முடியுமா?

ஜனாதிபதி பிரேமதாசாவின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் இப்போது புதுடில்லியில் நிற்கிறார் அவரது இந்திய விஜயம் வெகு இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. மின்னாமல், முழங்காமல் பெய்யும் மழைபோல அவரது திக் விஜயமாக அது அமைந்துவிட்டது.

வடக்கு - கிழக்கில் இப்போது நிகழும் யுத்தத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கம் நியாயமாக நடந்துகொள்கிறது; யுத்த மரபுகளைக் கடைப்பிடிக்கிறது என்று இந்தியாவுக்குப் பொய் சொல்வதற்காகச் சென்றிருக்கும் மூன்றாவது தூதர் இந்த வீரக்கோன்.

முதலில் சென்ற வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. பேர்னாட் திலகரத்தினா, அரசின் நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல், படுதோல்வியுடன் திரும்பி வந்தார்!

அரசாங்கத்தரப்பு மட்டும் போய் சொல்லும் பொய்யை இந்தியா நம்பாது: அனைத்துக் கட்சிக் குழு என்று ஒன்றை அனுப்பி தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும், அக்கிரமங்களையும் மூடி மறைக்க முயல்வோம்—இவ்வாறு முனைசெய்து ஒரு குழுவை அனுப்பியது அரசு.

அது நினைத்தது ஒன்று நடந்தது ஒன்றாக, பொய் சொல்லப் போன, முதல் முயற்சியிலேயே, முதற் கட்டத்திலேயே, மூக்குடைபட்டு விட்டது! அரசு தமிழர்களுக்கு கெடுதல் செய்யவில்லை. விடுதலைப் புலிகளுடன்தான் அரசபடைகள் மோதுகின்றன; யுத்தத்தை ஆரம்பித்தவர்களே புலிகள் தான்; என்று சொல்லப் போனவர்களிடம் —

தமிழர்களைக் கொன்று குவித்துக் கொண்டு, ஏன் ஐயா இங்கு வருகிறீர்கள் என்று கேட்பது போல, தலையில் ஓர் அடி போடுவது போல, மத்திய அமைச்சர்கள் ஏழு பேரும் மற்றும் பல எம். பிக்களும் அப்பாவித் தமிழர் கொல்லப்படுவது குறித்து குழுவினரிடம் கவலை தெரிவித்தார்கள்

மூன்றாவது தூதரான பிரட்மனும், வெளியுறவு அமைச்சரையோ, பிரதமரையோ சந்திப்பதற்கு முன்னர் ஆரம்ப மட்டத்திலேயே வெளியுறவுச் செயலாளர் திரு. முச்குண்ட் துபேயிடம் ''வாங்கிக்கட்டி''யிருக்கிறார்!

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மூன்றாவது நாடு ஒன்று தலையிடுவதை இந்தியா விரும்பவில்லை என்று திரு. துபே, சுற்றி வளைக்காமல், மிக வெளிப்படையாக, வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் திரு வீரக்கோனிடம் கூறியிருக்கிறார்.

உண்மையில் இது ஜனாதிபதியின் நாளொரு போககும், பொழுதொரு பேச்சும் என்ற நிலைப்பாட்டுக்குக் கிடைத்த அடி என்றே கொள்ளப்படவேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் பேசுவதானால் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் முன்னிலையிலேயே பேசுவது என்றும் -

இப்போதைய பிரச்சினையில் வெளிநாட்டுச் சக்தி எதையும் தலையிட அனுமதிக்க முடியாது; அனுமதிக்கப் போவதில்லை எனறும்- கூறி இந்தியாவை ஒதுக்கி விட்டு வேறு நாடுகளின் உதவிகளைப் பெறும் உள் நோக்கத்துடன் இருந்தவர் ஜனாதிபதி.

இந்த உள்நோக்கம் இந்தியாவுக்குப் புரிந்திருக்கிறது என்பதை திரு. துபே வெளிச்சமாகச் சொல்லியிருக்கிறார். சொல்வதையும் சொல்லிக் கொண்டு தூதுக்குழுக்களை அனுப்பி இந்தியாவின் நல்லெண்ணத்தைப் பெற முயற்சிப்பதாக இலங்கை அரசு நடிப்பதும் அவர்களுக்குப் புரியாமல் இருக்க நியாயமில்லை

அக்கிரமங்களையேனும் சரி, உள்நோக்கத்தையேனும் சரி எத்தனை நாட்களுக்கு மூடி மறைக்க முடியும்?

# முற்றாக பாதிக்கப்பட்ட பகுதி தபால்கள்
# மத்தியதபால் நிலையத்தில் விநியோகம்

யாழ்ப்பாணம்' ஜூலை 19

யாழ். நகரில் ஷெல் தாக்குதல், விமானத் தாக்குதல் துளினால் இடம் பெயர்ந்தள்ள மக்களுக்கான தபால்கள் மடத்தடியில் உள்ள யாழ். மத்திய தபால் நிலையத்தில் வைத்தே விநியோகிக்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். பிரதம தபால் அதிபர் மேற்கொண்டுள்ளார்.

யாழ். மத்திய தபால் நிலையத்தில் வைத்து தபால் வழங்கும் நடவடிக்கைகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பகுதியில் கொட்டடி, நாவாந்துறை குருநகர், யாழ்நகரின் சில வீதிகள் ஆகியவையே மக்கள் பெரும் அளவில் இடம் பெயர்ந்த பகுதிகள் ஆகும்.

இந்தப் பகுதிகளுக்கு தபால் சேகரிப்போர் செல்லமாட்டார்கள். அதே சமயம் தபால் விநியோகமும் இடம் பெறமாட்டாது.

இந்தப் பகுதிகளுக்கான தபால் விநியோகிப்பவர்கள் யாழ். பிரதம தபால் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கருமபீடத்தில் இருப்பார்கள்.

மேற் கூறப்பட்ட முற்றாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தோர் தமக்கு தபால்கள் வந்துள்ளனவா என்பதை யாழ். மத்திய தபால் அலுவலகத்துக்கு வந்து உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

காலை எட்டு மணியில் இருந்து நண்பகல் வரை யாழ். மத்திய தபால் நிலையத்தில் உள்ள கருமபீடங்களில் தபால்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (இ-10)

## வெளியூர் தபால் சேவை மீண்டும் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 19

கடந்த மாதம் 14ஆம் திகதியில் இருந்து கொழும்பில் தேங்கிக் கிடந்த வெளிநாட்டு, உள்நாட்டுக் கடிதங்கள் இன்று யாழ்ப்பாணம் வந்து சேரவுள்ளன.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டின்படி அந்தக் கடிதங்கள் மதவாச்சிக்கு, கொண்டு வரப்பட்டு, இன்று இங்கு எடுத்து வரப்படும்.

இதே போன்று இங்கு தேங்கிக் கிடந்த தபால்கள் கடந்த திங்கள் இங்கிருந்து புறப்பட்ட செஞ்சிலுவைச் சங்க வாகன அணி மூலம் மதவாச்சிக்கு அனுப்பப்பட்டன. (இ-10-3)

## உணவுப் பொருள் ஏற்றிவர சென்ற படகு வழிமறிக்கப்பட்டது
### நெடுந்தீவு மக்கள் பெரும் கஷ்டம்

நெடுந்தீவு, ஜூலை 19

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்திற்குரிய உணவுப்பொருள்களை எடுத்து வரக் குறிகாட்டுவான் சென்ற தனியார் படகு நடுக்கடலில் கடற்படையினரால் வழி மறிக்கப்பட்டது. அத்தோடு படகு ஊழியர்களும் தாக்கப்பட்டனர்.

இனிமேல் எந்தப் படகும் ஓடக்கூடாதெனவும் கடற்படையினர் எச்சரித்தனராம்.

அதன் பின்னர் பிரஸ்தாப படகு கரையை நெருங்கி நிறுத்தப்பட்ட சமயம் கடற்படைப்படகில் இருந்து வேட்டுகள் தீர்க்கப்பட்டன. இதனால் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டிகள் சில சேதமாகின.

மீனவர்களும் கடலுக்குச் செல்லக் கூடாதென எச்சரிக்கப்பட்டுள்ளனர். இதுபோன்ற நிலைமைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் நெடுந்தீவு மக்களுக்கு உதவுமாறு நெடுந்தீவு செஞ்சிலுவைச் சங்கக் கிளை யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்டுள்ளது.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதிகள் யாழ். அரசாங்க அதிபர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-111)

## செல்லச்சாமி சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 19

வடக்கு-கிழக்கு நெருக்கடிக்குத் தீர்வுகாண உதவுவதற்கு இ. தொ. கா. தயாராக உள்ளது.

துணை அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்பொதுச்செயலாளருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி முன்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்ப்போராளிகள் இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு முழுமனதுடன் நம்பிக்கையோடு வந்தால் இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவுவதற்கு இ. தொ. கா. தயாராக உள்ளது என்று திரு செல்லச்சாமி தெரிவித்தார். (அ-எ)

## மீண்டும் 100 ரூபா முத்திரை

கொழும்பு. ஜூலை 19

நூறு ரூபா முத்திரைகள் மீண்டும் புழக்கத்தில் விடப்பட உள்ளதாக தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்தது.

இம்மாதம் 19ஆம் திகதி முதல் பிரதான தபால் நிலையங்களில் நூறு ரூபா முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அமைச்சு அறிவித்து உள்ளது.

## ஜனசக்தி உணவு முத்திரை

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஜனசக்தி உணவு முத்திரை விநியோகத்தை மேற்கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபர் திரு.கே. சபாபதிப்பிள்ளை பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஜூன் மாதத்தின் இறுதிப் பகுதிக்கான விநியோகத்தையும், உணவுமுத்திரையின் 4 ஆம் இலக்கப்புள்ளிக்கான விநியோகத்தையும் மேற்கொள்ளுமாறு ப. நோ. கூ. சங்கங்களுக்கு அவர் அறிவித்துள்ளார். (இ-3)

## 3 தமிழர் வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 19

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நாவிதன்வெளி என்ற இடத்தில் 3 தமிழ்ப் பொதுமக்களை ''ஜிகாத்'' இயக்கத்தினர்வெட்டிக்கொன்றனர் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

வயலுக்கு சென்று கொண்டிருந்த வேளையில் பின்வருவோர் கொலை செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது:—

கறுவல் தம்பி [சவளக்கடை], ஆனந்தன் [சவளக்கடை], புஸ்பராஜா [நாவிதன்வெளி] (அ-9)

## தமிழர்கள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மூலமே முடிவு
### அத்துலத் முதலி கூறுகிறார்

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மூலமே முடிவு காணமுடியும்.

— இப்படி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறினார்.

அரசியல் தீர்வை ஏற்படுத்த சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அமைச்சர் லலித் தெரிவித்தார். (உ-எ)

## பொம்மர் தாக்குதலினால்
## யாழ். அரச செயலகத்துக்கு ரூபா 10 லட்சம் நஷ்டம்

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற பொம்மர் தாக்குதலினால் யாழ்-செயலகத்துக்கு 10 லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பழைய கச்சேரிக்கு முன்பாக குண்டுகள் விழுந்து வெடித்ததால் செயலகத்தில் உள்ள அரச அதிபரின் அலுவலகம் பலத்த சேதமடைந்துள்ளது.

அங்கு பொருத்தப்பட்டிருந்த மூன்று குளிர்சாதனக் கருவிகளும் உடைந்தன. கண்ணாடிகள், பல்புகள் சிதறியுள்ளன.

அத்துடன் பழைய கச்சேரியிலும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. (இ-3)

## தமிழருக்குத் தனிப்படை---

[1ஆம் பக்கத்தொடர்ச்சி]

காப்பாற்றுவார்கள் என்ற மனவலிமை மக்களுக்கு ஏற்பட வேண்டும்.

இன்று நடக்கும் போர் சிங்கள அரசுக்கு மட்டும் எதிரானதல்ல. சிங்கள பேரினவாதத்தால் ஆட்கொள்ளப்பட்டசகலசிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான போர் என்பதை இன்னும் எமது மக்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

### இனி இணைந்து வாழமுடியாது

சிங்கள மக்களும். தமிழ் மக்களும் இனி ஒரு போதும் இணைந்து வாழ முடியாது இரு நாடுகளாக வேண்டிய அளவுக்குத்தான் போராட்டம் நடைபெறுகிறது.

இதை ஒவ்வொரு தமிழ் மகனும் மனத்தில் நிறுத்தி செயல்பட வேண்டிய கால கட்டம் வந்துள்ளது. கடந்த காலங்கள் போன்று பேச்சுவார்த்தை, சொற்ப காலம் அமைதி என்ற நிலைக்கு இனி இடமில்லை.

இன்று சிங்கள அரசின் ஆக்கிரமிப்பால் மக்கள் மட்டும் தான் கஷ்டம் அனுபவிக்கிறார்கள் என்று கூற முடியாது போராளிகளும் கஷ்டம் அனுபவிக்கிறார்கள். மக்கள் வேறு, போராளிகள்வேறு என்றுபிரித்துநினைக்கும்நிலை இனி இருக்கவே கூடாது.

### உலகநாடுகளுக்கு குரல்கொடுப்போம்

தமிழ்மக்கள் இனக்கொலை செய்யப்படுகிறார்கள் என்றும் தமிழ் மக்களுக்கு எதிராக அரசு பொருளாதாரத் தடை விதித்துள்ளது என்றும் உலக நாடுகளுக்கு குரல் கொடுப்போம். இதனால் அரசிடம் இந்த தடைகளை நீக்க வேண்டும் என்று கேட்கிறோம் என்று அர்த்தப்பட மாட்டாது.

''ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிராக விதித்துள்ள எரிபொருள், உணவுத் தடைகளைப் பயன்படுத்தி நாம் பிரிந்து போகும்போது, நிலையாக இருக்கத்தக்க வகையில் தனித்துவமான சுய பொருளாதாரத் திட்டத்தை வளர்க்க வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசின் சீனிதான் வேண்டும், மாதான் வேண்டும் என்ற போக்கை மாற்றி எமது பிரதேசத்தின் உற்பத்திகளைப் பயன்படுத்தி நிறைவுகாண மக்கள் முன்வருவதும் எமது போராட்டத்துக்கான ஒரு பங்களிப்பாக அமையும்.

இன்று எமக்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகளை எதிர்த்து எவ்வாறு நாம் பழகிக் கொள்ள வேண்டும் என்று மக்கள் போராட்டம் நடத்த வேண்டிய நிலையில் உள்ளனர். எமது மண்ணைப் பயன்படுத்தி தன்னிறைவு காண வேண்டும். அரசிடம் இருந்து எதிர்பார்க்கும் நிலை மாற வேண்டும்.

### சுய பொருளாதாரம்

அரசிடம் எதிர்பார்க்கும் நிலையை மாற்றி எமக்கென்று சுய பொருளாதார நிலையை உருவாக்கவேண்டும். அதில் நாம் எம்மை பழக்கிக் கொள்ளவேண்டும்.

பேச்சுவார்த்தை வேண்டும் அதன்மூலம் தீர்வுகாணவேண்டும் என்று சிலர் கூறுகின்றார்கள். பேச்சுவார்த்தை நடத்தினால் எமக்கு முழு அதிகாரத்தையும் அரசு தருவார்களா? என்று சிந்திக்காதவர்களின் பார்வை தான் அது.

இன்று நடக்கும் போராட்டத்தில் இருந்து எவரும் விலக முடியாது. விலகவும் கூடாது. உலகில் உள்ள தமிழ் மக்களின் குரலாக, வழிகாட்டும் நாடாக ஈழம் உருவாகும். அந்தக் காலம் வெகு தூரத்தில் இல்லை.

இப்படி அவர் கூறினார்.

மகளிர் அமைப்பைச் சேர்ந்த சித்திரா, ஆசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினார்கள் [இ-3]

## ஆசிரியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரையும் சந்தித்து யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கு எப்போது சம்பளம் வழங்கப்படும் என்பது குறித்தும் இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்குச் சம்பள முற்பணம் வழங்குவது குறித்தும் ஆராய்ந்து முடிவு எடுக்க உள்ளனர்—

இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் தாங்கள் எம் மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்துள்ளனரோ, அம்மாவட்டக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு ஜூன் மாதச் சம்பளத்தைப் பெறலாமெனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது— என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அம்பாறையில்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புலிகள் ஆர். பி. ஜி ஒன்றையும், தொலைத் தொடர்பு கருவி ஒன்றையும் மீட்டதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

உயிரிழந்த ஸ்ரீலங்கா இராணுவப் படைச் சிப்பாய்கள் நால்வரின் சடலங்களும் முகாமில் கிடக்கக் காணப்பட்டன. [உ]

## பல தாக்குதல்---

[1ஆம் பக்கத்தொடர்ச்சி]

ஆகிய இடங்களில் பவள் ரக வாகனங்கள் சேதப்படுத்தப்பட்ட தாக்குதல்களிலும் இவர் முக்கிய பங்கு வகித்தார்.

இவரை உயிருடன் பிடிக்க இந்திய இராணுவம் பலதடவைகள் முயன்றது,

அத்துடன் ஸ்ரீலங்கா, இந்தியப் படையினர் பல தடவைகள் றேகன் தம்மால் கொல்லப்பட்டதாகப்பொய்ப் பிரசாரம் செய்து பெருமைப் பட்டுக் கொண்டனர்.

இயக்கத்தின் பயிற்சி முகாம்களிலும் ஏராளமான வீரர்களுக்கு இவர் பயிற்சி வகுப்புக்களை நடத்தியவர்.

அவர் குடும்பத்தினரும், உறவினர்களுமாக மொத்தம் 27 பேர் ஏற்கனவே ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் விசேட அதிரடிப் படையினரால் வெறித்தனமாக வெட்டிக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் றேகனின் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

அவருக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றது.

-இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

# சந்தைக்கு மேலதிக பணம் கொண்டு செல்லாதீர்;
# பொருளாதார சீராக்கல் குடும்பந்தோறும் தேவை

**இன்றைய பொருளாதாரம்**

(முன் தொடர்ச்சி)

(ix) தற்கால நடைமுறையில் வங்கிகள் சீராக செயற்பட முடிவதில்லை. பாதுகாப்பின்மையான நிலைமையில் சீராகச் செயற்படுதல் கடினமானதே. இதனால் வங்கிகளில் தாம் இட்ட பணத்தைத் தேவைக்கு வெளியே எடுக்க முடியாதென வாடிக்கையாளர் தீர்மானித்துவிடுவர்.

இதனால் மீண்டும் புராதன சேமிப்பு முறைகளுக்கு தங்களை மாற்றிக் கொள்வர். நகைகள், பணப்பதுக்கல் என்பவற்றில் நாட்டம் கொள்வர். வங்கியின் சேமிப்புச் சான்றிதழ்கள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள்

### தாக்கங்களும் தடுப்பு வழிகளும்

போன்ற நாணயமல்லாத சொத்துக்களில் முதலிடுவதை நிறுத்துவர்.

இதனால் பணச் சந்தை பின்தள்ளப்படும். மீண்டும் வங்கிகள் தம் நம்பிக்கைத் தன்மையை வளர்க்க நீண்டகாலம் தேவைப்படும்.

(x) கிராமப்புற வறுமை கூடிவிடும். பெற்றோரை இழந்தவர்களும். பெற்றோரை விட்டு திசை தெரியாது இடம் பெயர்ந்தவர்களும் அகதி முகாம்கள் மூடப்படும் போது அனாதைகளாகும் சந்தர்ப்பம் உண்டு இதனால் சிறுவர்கள் தொழிற்கூலிகளாக மாற நிர்ப்பந்திக்கப்படுவர் சில குடும்பச் சுமையும் அவர்களில் சுமத்தப்படும்.

பாடசாலை செல்லாமல் இடைநடுவில் கல்வியை நிறுத்துவோர் தொகை அதிகரித்து விடும். கல்வித்தரம் குறையும் நீண்டகாலத்தில் நம்பிக்கை கொண்ட, திட்டமிட்டு செயற்படும் மக்களின் எண்ணிக்கை சமூகத்தில் குறைவடைய இவை வழிவகுக்கும்.

[xi] இடம் பெயர்ந்தோர், அகதிகளாக நீண்ட காலம் பராமரிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படும். ஆனால் நெருக்கடியின் தீவிரம் குறைந்து மீண்டும்

### பகுதி 4

வழமை நிலை திரும்பத் தொடங்க அகதி முகாம்களுக்கான உதவிகளைப்பெறுவதும் கடினமாகிவிடும் அரசு அல்லாத நிறுவனங்களும் தம் முயற்சிகளைக் குறைத்துக் கொண்டால், அகதிகள் தாமாக முகாம்களை விட்டு வெளியேறுவர்

சரியான ஏற்பாடுகள் எதுவும் இல்லாத இடத்து பிச்சைக்காரர்கள் அதிகரிக்கலாம் சிறு குற்றங்கள் அதிகரிக்கலாம். சமூகப் பிறழ்வு நிலைக்கு இது இட்டுச்செல்லும். இதனால் சமூகப் பின்னடைவு அதிகரிக்கும்.

(xii) அரச நிறுவனங்கள் உப அரசபகுதிகள், உள்ளூராட்சி மன்றங்கள் போன்ற புனரமைப்பு வேலைகளுக்கு அதிகளவு நிதிகளை ஒதுக்க வேண்டியிருக்கும். மறுபுறமாக, தொழில் துறையிலிருந்து வரிகளை அறவிடுதலும் கடினமாகிவிடும். இதனால் இவற்றுக்கு நிதி நெருக்கடி ஏற்படும். இதனால் புதிய செயற்திட்டங்கள் கைவிடப்படும் புதியதொழில் வாய்ப்பும் தடைப்படும். இது பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்தும்.

### சீராக்க நடவடிக்கைகள்

போர்க்கால பிரச்சினைகளினால் குடும்ப சமநிலை, தொழில் நிறுவனங்களின் சமநிலை குலைந்திருப்பதால் மீண்டும் இவற்றில் ஒரு சீரான நிலைமைகளை உருவாக்கும் நடவடிக்கைகளில் அக்கறை செலுத்த வேண்டும். தனிமனித செயற்பாடுகளிலும், குடும்ப மட்ட ஒழுங்கு முறைகளிலும், நிறுவனங்களின் செயல் முறைகளிலும், அரசாங்க, உள்ளூராட்சி மன்ற நிகழ்ச்சித் திட்டமுறைகளிலும் சீராக்குவதற்கான செயன்முறை வேண்டும்.

இவற்றிடையே பொது இலக்குகளும், பொதுத் தொடர்புகளும் ஏற்படுத்தப் படல் வேண்டும். அவ்வாறு செய்வது கடினமானதே. ஆனால் அக்கடினமான பொறுப்பு மிகுந்த நடவடிக்கை தவிர்க்க முடியாததாகும். இவற்றின் அமுலாக்கத்தில் மக்களது உளரீதியிலான ஒப்புமை, தியாகம் செய்யும் விருப்பம், கடின உழைப்பு என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் உண்டு.

இத்தகைய நடைமுறைகள் பற்றி சில வழிகாட்டல்களைக் குறிப்பிடமுடியும்

(1) குடும்பங்களில தம் செலவினங்களை ஒழுங்குபடுத்தவும், இயன்றளவு பண வருமானத்தை உயர்த்தவும் நன்கு திட்டமிடுதல் வேண்டும். குறிப்பாக குடும்பத் தலைவரும், தலைவியும் கலந்துரையாடி முடிவு செய்தல் வேண்டும். இவர்கள் பின்வரும் விடயங்களில் அக்கறை செலுத்த முடியும்.

(அ) நுகர்வுக்கான பண்டங்களை வாங்கும் போது வருவாய்க்குத் தக்கதாக, குடும்ப அங்கத்தினர் வயதின் [illegible] வாங்குதல் வேண்டும்.

வருமானத்திற்கு உட்பட்டு ஒரு குடும்ப வரவுசெலவுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். தேவையற்ற உடைகள் ஆடம்பர பாவனைப் பொருள்கள், பழுதடையும் உணவுப் பண்டங்கள் அதிகம் கழிக்கப்படவேண்டியிருக்கும் காய்கறிகள் என்பவற்றை வாங்குவதைத் தவிர்க்கவேண்டும்.

மலிவானது என்பதற்காக தரம் கெட்டதை அவசரப்பட்டு கொள்வனவு செய்தல் கூடாது. பழங்களில் பணப் செலவிடும்போது இருமுறை யோசித்து செலவிடுதல் வேண்டும்.

(ஆ) சந்தை செல்லும் போது மேலதிகமாக பணம் கொண்டு செல்லக்கூடாது. பிறர் அதிகம் வாங்குகின்றனர் என்பதற்காக உங்களுக்கு அவசியமில்லாதவற்றையும் வாங்கிவிடலாம். சந்தை செல்லுமுன் ஒருபட்டியலை தயாரிப்பது பணத்தை கவனமாகச் செலவிட உதவும்.

(உ) போதிய நேரமிருப்பதால் ஒருபண்டத்தை வாங்குமுன், கூட்டுறவுச்சங்கம், மொத்த வியாபாரிகள், வழக்கமாகப் பொருள்கள் தரும் வியாபாரிகள் ஆகியோரிடம் விலையை விசாரித்து எங்கு குறைவானதோ அங்கு கொள்வனவு செய்தல் வேண்டும்.

இங்கெல்லாம் இடையாதிருந்தால் மாத்திரம் புதிய சில்லறை வியாபாரியிடம் வாங்குதல் வேண்டும். அரிசி ஆலைகளிருப்பின் அரிசி, தவிடு போன்றவற்றை அங்கு வாங்க முயற்சிக்கலாம்.

(வளரும்)

மா. சின்னத்தம்பி
[B. A. B Phil Hons]
துணை ஆசிரியர்,
பொருளியலாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spoken English
ஆங்கிலம் பேச வேண்டும் என்ற விருப்பம்; ஆனால் தவறாகப் பேசிவிடுவோம் என்ற தயக்கம். இதுதானே உங்கள் பிரச்சினை. உளவியல் ரீதியில் 90 நாட்களில் ஆங்கிலம் பேசும் பயிற்சி.
விபரங்கட்கு:
BRIGHT TRAINING CENTRE
P. O. BOX. 162. COLOMBO, SRI LANKA.

# உதயன்

19 7 - 1990 வியாழக்கிழமை

Method of Book-keeping
கடை கணக்கு முதல் கம்பனி கணக்கு வரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்து தபால் மூலம் கற்றுத்தரப்படும் ஆறு மாத கால Diploma பயிற்சியாகும்.
விபரங்கட்கு:-
BRIGHT TRAINING CENTRE
P. O. BOX, 162. COLOMBO, SRI LANKA.

# இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற கட்சி பேதம் மறந்து ஒன்றுபடுக!

## கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, ஜூலை 19
கட்சி பேதங்களை மறந்து இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற தமிழக மக்கள் ஒன்றிணைந்துநடவடிக்கை எடுக்க வேண்டும்.

முதலமைச்சர் மு. கருணாநிதி முன்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

கிருஷ்ணகிரியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முதலமைச்சர் பேசுகையில் மேலும் சொன்னதாவது: 1983 இல் இருந்தே இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டுவருகிறார்கள்.

அவர்களைக் காப்பாற்ற தமிழக மக்களுக்கு முடியாமல் உள்ளது வருந்தத்தக்க விஷயம்.

இதனை ஒட்டியே தி.மு.க. வெள்ளிக்கிழமை மாநிலத்தில் ஹர்த்தால் ஒன்றை நடத்தத் தீர்மானித்து உள்ளது.

இப்படி திரு. கருணா நிதி தெரிவித்தார். (இ - எ)

## மன்னார் அரச அதிபர் முயற்சி

மன்னார் மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ள மன்னார் அரச அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் நேற்று யாழ்ப்பாணம் வந்தார்.

அவசர தேவையாக உள்ள மின்சார இணைப்பை பெறுவதற்காக மின்சார சபை ஊழியர்களை அங்கு அழைத்துச் செல்ல வேண்டிய ஒழுங்குகளை அவர் நேற்றுக் கவனித்தார்.

அத்தியாவசிய சேவைகளை மன்னாரில் மீள நடைமுறைப் படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார். (அ-3)

## மாங்குளத்தில் மோதலை- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
டார் - ஒன்று.

★ ஐ. எம். ரவைகள்-3ஆயிரம்.

★ குண்டு துளைக்காத ஜாக்கெட் இரண்டு.

★ டொங்கான் ஒன்று (அதற்குரிய இரண்டு ஷெல்லுடன்)

ஆகியவை மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்றுநண்பகல் ஒரு மணி முதல் அவ்ரோ விமானம் ஒன்று, மூன்று பொம்மர்கள், நான்கு ஹெலிக்கொப்டர்கள் ஆகியவை முகாமைச் சூழவுள்ள பகுதிகள்மீது கடும் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

முகாமுக்குள் ஹெலிகளை இறக்கச்செய்யும் முயற்சியாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் -

ஹெலிகளை இறங்கவிடாது தமது போராளிகள் நடத்திய எதிர்த்தாக்குதல் நடவடிக்கையின்போது ஜஸீர் [சம்மாங்குளம் - ஒட்டிசுட்டான்]என்ற போராளி வீரமரணம்அடைந்தார் என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் குறிப்பிட்டன. [உ]

## மாங்குளம் தாக்குதலில் மூன்று சிப்பாய்கள் பலி

கொழும்பு ஜூலை 19
மாங்குளம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோதல் ஒன்றில் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். பதினொரு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்தனர்.

மாங்குளம் இராணுவ முகாமைச் சுற்றியுள்ள தீவிரவாதிகளின் பதுங்குகுழிகளை அழிக்கும் முயற்சியில் பீரங்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிக் கொப்டர்கள் பயன்படுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மட்டக்களப்பு, கல்முனையில் ராணுவம் வீடு வீடாகத் தேடுதல்

கொழும்பு, ஜூலை 19
மட்டக்களப்பு, கல்முனை ஆகிய இடங்களில் பாதுகாப்புப் படையினர் வீடுவீடாகத் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளைக் கண்டுபிடிப்பதற்காகவே இத்தேடுதல்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன

எனினும் இந்நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்தவர்கள் எனக் கருதப்படுபவர்கள் மீது இராணுவத்தினர் வஞ்சம் தீர்ப்பதாகக் கூறப்பட்டது.

இப்பகுதியில் விடுதலைப் புலிகள் போராளிகளுக்கு அடைக்கலம் கொடுக்கவேண்டாம் என்றும் அப்பகுதி மக்களுக்கு இராணுவம் எச்சரிக்கை விடுத்திருக்கிறதாம்.

கல்முனைக்கு அருகே பட்டியிருப்பு என்ற பகுதியில் ஏராளமான பொலீஸாருக்கான சீருடைகளையும், பெல்டுகளையும் இராணுவத்தினர் மீட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. [அ-எ-9]

## மீன் விலை

யாழ்ப்பாணம், ஜூலை 19
யாழ்ப்பாணத்தில் மீன் விலை திடீரென இறங்கியுள்ள இதேவேளை மீன் வாங்கிய பலரும், இறால் நண்டை நாடுகின்றனர்.

கடந்த சில தினங்களாக குருநகர், அல்லைப்பிட்டி பகுதிகளில் மனித சடலங்கள் ஒதுங்குவதே இதற்குக் காரணம் ஆகும். [இ-10]

## தென்மராட்சியில் ஊர்வலம்

ஸ்ரீலங்கா அரசின் இன அழிப்பு மற்றும் படுகொலைகளைக் கண்டித்து நேற்று தென்மராட்சியில் ஆர்ப்பட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

தென்மராட்சி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் கண்டனகோஷங்கள் எழுப்பியபடியும், பதாகைகளை தாங்கியபடியும் சாவகச்சேரியை சென்றடைந்தது (ஓ-9)

# கோட்டை, பலாலி முகாம்களை புலிகள் கைப்பற்றாதது ஏன்?

## சாவகச்சேரி அரசியல் பொறுப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம். ஜூலை, 19
கொக்காவில் இராணுவ முகாமைத் தாக்கி நிர்மூலமாக்கியதுபோல் யாழ். மாவட்டத்திலுள்ள பலாலி, ஆனையிறவு, கோட்டை முகாம்களை ஏன் விடுதலைப் புலிகள் தாக்கிக் கைப்பற்றுகிறார்கள்இல்லை என்று பொது மக்கள் கேட்கிறார்கள். கொக்காவில் முகாம் தாக்குதலில் ஒரே இரவில் 18 போராளிகளை நாம் பறிகொடுத்தோம். ஆனால் அதே இரவில் எத்தனை பேர் எமது இயக்கத்தில் புதிதாகப் போராளிகளாகச் சேர்கிறார்கள். இந்நிலையில் நாம் எப்படி மேலும் இராணுவ முகாம்களைக் கைப்பற்ற முடியும்?

நேற்று தென்மராட்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் இறுதியில் இடம் பெற்ற பொதுக்கூட்டத்தில் சாவகச்சேரிப்பிரதேச விடுதலைப்புலிகள் அரசியல் பொறுப்பாளர் பாப்பா உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

கூட்டத்துக்கு மாணவர் பொறுப்பாளர் ரஞ்சன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பாப்பா தொடர்ந்து பேசுகையில்; கடந்த பல வருட கால போராட்ட வரலாற்றில் எத்தனை பொருளாதார தடைகளையும், எரிபொருள் தடைகளையும் சந்தித்திருக்கின்றோம்.

அப்படியிருந்தும் நாம் ஏன் இன்றும் நம்மைத் தயார் படுத்திக்கொள்ளவில்லை என்றார்.

கூட்டத்தில் ஆசிரியர்வைரமுத்து, வட்ட அவை உறுப்பினர் சோதிநாதன், விரிவுரையாளர் சதாசிவமூர்த்தி அதிபர் வி. சே. ரத்தினகுமார், ஆசிரியர்கள் நாகேஸ்வரன், சந்திரசேகரம், பச்சிலைப் பள்ளி பிரதேசப் பொறுப்பாளர் செல்வராஜா ஆகியோர் உரையாற்றினர்.

சாவகச்சேரி நகரப்பொறுப்பாளர் கோபால் நன்றிஉரை வழங்கினார். [இ-9]

## முதலுதவி பயிற்சியும் கூட்டமும்

யாழ்ப்பாணம், ஜூலை 19
பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவர் மன்றத்தின் சார்பில் எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு கலாசாலையில் முதலுதவி பயிற்சி நெறி நடைபெற உள்ளது.

இதில் ஆசிரிய மாணவர்கள் இருபாலாரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

முதலுதவி பயிற்சியை செண். ஜோன்ஸ் அம்புலன்ஸின் கோப்பாய் படை அத்தியட்சகர் பிரிவினர் நடத்துவர்.

இதனிடையில், தற்போதைய நிலைமைகள் தொடர்பான பொதுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 23 ஆம் திகதி கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல மாணவர்களையும் கலந்து [illegible] ளும்படி மாணவர்மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. [ஓ]

## திருமலையில் இடம்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
★ கடந்த வியாழனன்று சீனக்குடாவில் வைத்து குருசாமி துரைரத்தினம், அழகையா ஆனந்தன்,ஷெல்டன், கந்தையா அந்தோனி, சிவராஜா, அ. டக்ளஸ் ஆகிய ஆறு பேரை இராணுவத்தினர் கைது செய்தனர்.

★ கடந்த வெள்ளியன்று சீனக்குடாவில் சசி என்ற இளம் பெண்ணை சிங்கள ஊர்காவல் படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

★ அதே தினம் கப்பற்றுறை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 6 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

★ கடந்த ஞாயிறன்று ஆலங்கேணியில் வைத்து சிதம்பரநாதன் என்பவரை இராணுவத்ினர் சுட்டுக் கொன்றனர்.

★ கடந்த திங்களன்று ஆலங்கேணி அகதி முகாமில் வைத்து செல்லையா றேமன், சின்னையா கனகசிங்கம், சிவஞானம், கோணமலை செல்லத்தம்பி ஆகிய நான்குபேரை இராணுவத்தினர் கைது செய்தனர்.

★ அதே தினத்தில் ஆலங்கேணியைச் சேர்ந்த சீனித்தம்பி கனகசாமி என்பவரை கிண்ணியாவில் வைத்து இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்தனர்.

★ கடந்த செவ்வாயன்று தம்பலகாமம் 13ஆம் கட்டையைச் சேர்ந்த பரமநாதன் என்பவரை கிண்ணியாவில் வைத்து முஸ்லிம் ஊர்காவல் படையினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

— இப்படித் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இராமேஸ்வரம் --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இரண்டாவது சம்பவத்தில் இராமேஸ்வரம் கரையோரத்திற்கு அப்பால் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் சிலரை நோக்கி இலங்கைக் கடற்படையினர் படகு ஒன்றில் இருந்து சுட்டதில் ஒரு மீனவர் காயமடைந்தார்.

காயமடைந்த இரண்டு மீனவர்களும் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். [அ-எ]

## இந்திய மீனவர்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இன்னொரு சம்பவத்தில் இராமேஸ்வரத்தில் இருந்து சென்ற இந்திய மீன் பிடிப் படகு ஒன்றை இலங்கைக் கடற்படையினர் மறித்து இலங்கைக் கரைக்கு இழுத்துச் சென்றனர். படகில் இருந்த இந்திய மீனவரைப் பின்னர்கடற்படையினர் தாக்கினர். மீனவரின் உடைமைகளையும் கடற்படையினர் பறித்துக்கொண்டனர்.

வேறொரு சம்பவத்தில் இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த 12 ஆம் திகதி படகு [illegible] 5 இந்திய மீனவர்களைக் [illegible] கப்பட்டுள்ளது. (இ-எ)

## வாகன அணி

யாழ்ப்பாணம், ஜூலை 19
அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வருவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்த மதவாச்சிக்குச் சென்ற 25 லொறிகளடங்கிய வாகன அணி இன்று வியாழக்கிழமை இங்கு வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (அ-9)

## கிழக்குப் பல்கலை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யல்ல.

—இவ்வாறு கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து கொழும்புக்குப் போய் அங்கிருந்து தற்போது யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத்தினர் பல்கலைக்கழகத்திற்குள் புகுந்து சத்திமுனையில் மாணவர்களை விசாரித்ததாகவும் அவர் சொன்னார்.

பல்கலைக்கழகத்தின் ஒரு விரிவுரையாளர் ஹெலித் தாக்குதலினால் உயிரிழந்தார். ஏனையோர் ஆபத்து ஏதுமின்றி பல்கலைக்கழகத்திலேயே தங்கியிருக்கிறார்கள்.

வசதியுள்ள சில விரிவுரையாளர்களும் மாணவர்களும் மாத்திரம் கொழும்புக்குச் சென்று அங்கு தங்கியிருக்கிறார்கள் என்றார் அவர். (உ)

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் தர்மதுரை அசோக்குமார் (இளவாலை)

லீலன் லொட்ஸ், முள்ளானை இளவாலையைப் பிறப்பிடமாக கொண்ட தர்மதுரை அசோக்குமார் 15- 7 - 90 நோர்வேயில் அகால மரணமானார்,

இவர் காலம் சென்ற அருளம்பலம் தர்மதுரை, அன்னம்மாவின் அன்புப் புதல்வரும், சந்திரலீலா (ஆசிரியை இளவாலை கன்னியர்மடம்), புஸ்பலீலா, வசந்தலீலா ராதாக்கிருஸ்ணன் (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகரட்ணம், விக்னேஸ்வரராஜா, சிறிஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்வன் சஜந்தனின் ஆசை மாமனுமாவார்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். ஈமக்கிரிகைகள் 21 - 07 - 90 நோர்வேயில் இடம் பெறும்.

தகவல்:
திருமதி. அ. தர்மதுரை.
(13767)

## வைத்திலிங்கம் சிங்கவேலு

[மருதனாமடம் எரிபொருள் நிலைய உரிமையாளர்]

வைத்திலிங்கம் சிங்கவேலு (மருதனாமடம் எரிபொருள் நிலைய உரிமையாளர்) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இரகுநாதன் மாப்பாண முதலியார் அவர்களின் மகள் தேவசேனாவின் அருமைக் கணவரும், இரகுநாதன், விஜயகுமாரி, ஐங்கரன், வித்தியாதரன், சண்முகதாஸ் ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், பார்த்தசாரதி, சுபத்திரா, சர்வேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரனும், குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களின் மைத்துனரும், குலேந்திரன் அவர்களின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-07-1990 காலை பத்து மணியளவில் 238, கோவில் வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
238, கோவில் வீதி, நல்லூர்.
சி. வித்தியாதரன்
[13674]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிருஷ்ணபிள்ளை நாகமுத்து

[இளைப்பாறிய சுகாதார இலாகாப் பரிசாரகர்]

காங்கேசன்துறையைச் சேர்ந்த திருமதி கிருஷ்ணபிள்ளை நாகமுத்து 1990-07-18 இல் காலமானார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளையின் (சீமெந்துக் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், சீதா, பரமேஸ்வரி, மனோகரன் (எரியூட்டுனர். சீமெந்துக் கூட்டுத்தாபனம்), சந்திரசேகரன் (பிரான்ஸ்), குணசேகரன், ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அரியரட்ணம், மகாலிங்கம் (பாதுகாப்பு உத்தியோகத்தர், சீமெந்துக் கூட்டுத்தாபனம்), ஜெயகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும், மயில்வாகனம், செல்வராஜா (சீமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இலங்கைநாதன், முத்தம்மா, பூபதி, விமலாம்பிகை ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்கு 1990-07-19 ஆந் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு மல்லாகம் கோட்டைக்காடு அரசினர் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள சுகுமார் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
இருஷ்ணபிள்ளை மனோகரன் (மகன்)
கோட்டைக்காடு, மல்லாகம்.
[13677]

## நாகலிங்கம் கணேசபிள்ளை (R.M.O)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பிறவுண் வீதி வாசியுமான நாகலிங்கம் கணேசபிள்ளை (R.M.O., பொத்துவில் அரசினர் வைத்தியசாலை) பொத்துவிலில் அகால மரணமானார்.

இவர் குகச்செல்வியின் அன்புக் கணவரும், கிரிதரன், தனசுதன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம்சென்ற K. நாகலிங்கம், குணமாலை (ஆசிரியர், 11-ம் வட்டாரம், புங்குடுதீவு) பாக்கியம் அவர்களின் அன்பு மகனும், அருளம்பலம் சோமாஸ்கந்தர் (முன்னாள் மேக்கன்ரைல் வங்கி குமாஸ்தா) கௌரியம்மா அவர்களின் அன்பு மருமகனும், மீனாம்பாள் செல்லத்துரை, தனலட்சுமி கெங்காதரம்பிள்ளை, நகுலேசபிள்ளை, சந்திரசேகரம், கனகலட்சுமி, சண்முகநாதன், இராசலட்சுமி தர்மலிங்கம், முருகபூபதி, தணிகாசலம், ஞானசேகரம், குலசேகரம், சிவசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், குகேந்திரரூபன், அற்புதரூபன், நிரூபன், சொரூபவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். உற்றார், உறவினர் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
212, செம்மணி றோட், நாயன்மார்கட்டு, நல்லூர்.
அ. சோமாஸ்கந்தர்
[13675]

## திருமதி ம. பொன்னாச்சிப்பிள்ளை

மேல்கரவை திருமதி ம. பொன்னாச்சிப்பிள்ளை அவர்கள் சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் முருகேசு மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், வைத்திய கலாநிதி முருகேசபிள்லை(கல்முனை), திரு. ம. சிவராசா (ஆளுனர் நாயகம், முரசொலி), திருமதி அன்னலட்சுமி, குகதாசன், செல்வி சரஸ்வதி தேவி, திருமதி மகேஸ்வரி நடராசா (சவுதி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி புஷ்பாஞ்சலி, திருமதி பாலாம்பிகை, திரு. க. சி. குகதாசன் (அதிபர், யாழ். இந்துக் கல்லூரி), திரு. சி. நடராசா (சவுதி - பிருத்தானிய வங்கி - சவுதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கலட்டி, கரவெட்டி மேற்கிலுள்ள அவர்களது இல்லத்திலிருந்து இன்று 19-7-90 (வியாழக்கிழமை) பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக குடும்ப மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.
கலட்டி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
(13676)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org